**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-4 Date : 04.06.2025

Case No. : **O.S.492/2019** Nationality : Indian

Name : கார்த்திக் (கிராம நிர்வாக அலுவலர், கோடாந்தூர் வடக்கு கிராமம்) Religion :

Age : 33

Father's/Husband's Name :

Village :

Taluk :

வா.சா.4

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் இதே வழக்கில் கடந்த 29.02.2024 அன்று நீதிமன்றத்தில் தோன்றி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சாசாஆ 3 மற்றும் சாசாஆ 4 ஆகிய ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். சாசாஆ 3 ல் 1430 ம் பசலியில் நெல் பயிர் சாகுபடி செய்துள்ளதாக 24.11.2020 ம் தேதியில் சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 10 ஆவணம் என்னால் வழங்கப்பட்ட 02.02.2022 ம் தேதியிட்ட அடங்கலானது 1430 ம் பசலியின் அடங்கலாகும் என்றால் சரிதான். ஒரே பசலிக்கு 2 வருடத்திற்கு முன்பாக சான்றும் 2 வருடம் கழித்து அடங்கலும் கொடுக்க இயலாது என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 10 ஆவணத்தில் காலம் 7 ல் நிலத்தின் எந்த பகுதியாவது சாகுபடியாளரால் பயிரிடப்பட்டுள்ளதா என்பது நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலம் 7 ல் குத்தகைதாரர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பயிரிடுவபரின் பெயர் இடம் பெற்றிருந்தால்தான் நிரப்பப்படும் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 10 ஆவணத்தில்

காலம் எண் 6ல் உரிமையாளர் என்பது பிரதிவாதியின் பெயரை தவிர்த்து சம்சாத்பேகம் என்பவரின் பெயரும் உரிமையாளராக இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். நான் சம்மந்தப்பட்ட இடத்திற்கு சென்று ஆய்வு மேற்கொள்ளாமல் சான்று அளித்துள்ளதால்தான் சான்றும் அடங்கலும் வெவ்வேறு தேதிகளில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- J. Jayganesh,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur. (FAC)